செய்தி வெளியீடு எண் : 330 நாள் : 20.02.2024

**மாண்புமிகு உயர்கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தமிழ்நாடு அரசின் உயர் கல்வித் துறை, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் புது தில்லி பிரிட்டிஷ் தூதரகம் இணைந்து 3000 இளைஞர்களுக்கு விசா விண்ணப்பம் பெறுவதற்கான Young Professionals Scheme திட்டத்தை தொடங்கி வைத்தார்**

இன்று (20.02.2024) அண்ணா பல்கலைக் கழக விவேகானந்தர் கூட்டரங்கில் மாண்புமிகு உயர்கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் மற்றும் பிரிட்டிஷ் தூதரக ஆணையர் திரு. அலெக்ஸ் எலிஸ் அவர்கள் (Mr. Alex Ellis the British High Commissioner) முன்னிலையில் தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை மற்றும் புது தில்லி பிரிட்டிஷ் தூதரகம் இணைந்து, Young Professionals Scheme திட்டத்தின் மூலம் 18 முதல் 30 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு விசா விண்ணப்பம் பெறுவதற்கான நிகழ்வு நடைபெற்றது. இதன் மூலம் நமது இந்திய இளைஞர்கள் இரண்டு வருட காலத்திற்கு பிரிட்டன் சென்று வேலை வாய்ப்பு பெறவும், பிரிட்டிஷ் இளைஞர்கள் நமது இந்தியாவில் தங்கி வேலைவாய்ப்பு பெறவும் வழி செய்கிறது. இதன் மூலம் இருநாட்டு இளைஞர்களும் தங்களுடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவும் தொழில்துறை சார்ந்த அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் துணை செய்கிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகல்வி மற்றும் உயர்கல்வியை மேம்படுத்தி, புதுமையான **'நான் முதல்வன்'** திட்டத்தின் கீழ் 28 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும் **'புதுமைப் பெண்'** திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் **3 லட்சம் மாணவியர்களுக்கு** கல்வி உதவித் தொகையாக மாதம் **ரூபாய் 1000-ம்** வழங்கும் திட்டமும் செயல்படுத்தி வருகிறார் என்றும் தெரிவித்தார்.

மேலும் 2024-2025 பட்ஜெட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவியர்களுக்கும் புதுமைப் பெண் திட்டம் அமல்படுத்தப்படும் என தெரிவித்து **ரூ.370 கோடி** நிதி வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதுபோலவே அரசு பள்ளியில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கும் **'தமிழ் புதல்வன்'** என்னும் திட்டத்தின் கீழ் மாதம் ரூ,1000 வழங்க அறிவித்துள்ளார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் அவர்கள் உயர்கல்வியில் தொழில்முறை படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீட்டை நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார் என்றும் இந்தியாவிலேயே தமிழகம் ஒரு முன் மாதிரி மாநிலமாக திகழ்கிறது என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய வெளியுறவு துறை குடியேற்ற கொள்கை மற்றும் நல பிரிவு இயக்குநர் திரு. நிதேஷ் குமார், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.வேல்ராஜ், கிண்டி பொறியியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சுகந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**